# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.1

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.வெள்ளைச்சாமி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 17th day of October, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி மாவட்டம் திருவேங்கடம் தாலுகா, கலிங்கப்பட்டி கிராமம், மேலத்தெருவில் வசித்து வருகிறேன். என் மனைவி பெயர் ரமணி, அவர் இறந்து 5 ஆண்டுகள் ஆகிவிட்டது. எனக்கு 2 பெண் குழந்தைகளும், 1 ஆண் குழந்தையும் உள்ளது. மூத்த மகள் பெயர் காயத்ரி, இளைய மகள் பெயர் வைதேகி, என் மகன் பெயர் அஜித்குமார். வழக்கில் இறந்துபோனவர்கள் என் மகள் காயத்ரியும், என் பேரன் கோகுல்ரக்ஷனும் ஆவர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் தான் என் மகள் காயத்ரியின் கணவர். என் மகள் திருமணத்திற்கு முன்பு செவல்பட்டியில் உள்ள பி எஸ் ஆர் கல்லூரியில் பணிபுரிந்து வந்தார். எதிரியும் பி எஸ் ஆர் கல்லூரியில் பணிபுரிந்தார். இருவரும் ஒரே இடத்தில் பணிபுரியும் போது இருவருக்கும் இடையே காதல் ஏற்பட்டதால் இரு குடும்பமும் பேசி அவர்களுக்கு விஜயகரிசல்குளத்தில் உள்ள முருகன் கோவிலில் வைத்து திருமணம் செய்து வைத்தோம். திருமணத்திற்கு பிறகு கொரோனா காவலத்தில்

என் மகளை வேலையை விட்டு நிறுத்திவிட்டதால் அதன்பிறகு திருவேங்கடத்தில் உள்ள கலைவாணி மெட்ரிக்குளேசன் பள்ளியில் ஆசிரியராக பணியில் சேர்ந்தார். என் மகளும் ஆஜர் எதிரியும் திருமணத்திற்கு பின்னர் முதலில் ஆஜர் எதிரியின் பெற்றோர்களுடன் கூட்டுக் குடுத்தனமாக வசித்து வந்தனர். அதன்பின்னர் ஆஜர் எதிரி வேலைக்கு போகாமல் வீட்டிலேயே இருந்து வந்ததால் அவர் தனிக்குடித்தனம் வைத்பி எஸ் ஆர் கல்லூாியில் தால் திருந்திவிடுவார் என எண்ணி ஆஜர் எதிரியின் பெற்றோர்கள் என் மகளையும், ஆஜர் எதிரியையும் விஜயகரிசல்குளத்தில் ஆஜர் எதிரியன் பெற்றோர் வீட்டிற்கு அருகில் தனிக்குடித்தனம் வைத்தனர். சம்பவத்தின் போது எனது மகளுக்கு 4 மாதம் நிரம்பிய கோகுல்ரக்சன் என்ற மகன் இருந்தார். குழந்தை பிறந்த போது என் மகள் வேலைக்கு செல்லவில்லை. ஆஜர் எதிரி வேலைக்கு போகாமல் என் மகளுக்கு நான் திருமணத்தின் போது அணிவித்த 20 பவுன் நகைகளை அடமானம் வைத்து வீணாக செலவு செய்தது தொடர்பாக என் மகளுக்கும், ஆஜர் எதிரிக்கும் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்பட்டது. இந்த பிரச்சினைகள் ஏற்பட்ட போதெல்லாம் இந்த விவரத்தை என் மகளாவது, என் சம்மந்தியாவது, அல்லது எதிரியின் தம்பியான பசும்பொன் (எ) முத்துராமலிங்கமாவது என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கூறுவர். அவ்வாறு நான் விஷயம் கேள்விபட்டால் உடனே விஜயகரிசல்குளம் சென்று ஆஜர் எதிரியையும், என் மகளையும் சமாதானம் செய்துவிட்டு வருவேன். கடந்த 25.05.2022ம் தேதி என்இளைய மகள் வைதேகியை கோவில்பட்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதித்து அவளுடன் நானும் மருத்துவமனையில் இருந்தேன். அப்போது என் மகன் என்னை தொடர்பு கொண்டு அவனுக்கு ஆஜர் எதிரியின் தம்பி பசும்பொன் (எ) முத்துராமலிங்கம் போன் செய்ததாகவும், என் மகள் வீட்டில் மயங்கிக்கிடப்பதாகவும், தகவல் சொன்னதாகவும் என்னிடம் கூறினார். நான் என் மகனை முன்னால் செல்லுமாறு கூறிவிட்டு நான் பின்னால் சென்றேன். எனக்கு தகவல்

கிடைத்தபோது மாலை 06.00 மணி இருக்கும், நான் என் மகள் வீட்டிற்கு சென்றபோது இரவு 07.00 மணி இருக்கும். நான் போன போது என் மகளின் வீட்டைச்சுற்றி ஒரே கூட்டமாக இருந்தது. மாடிக்கு சென்று பார்த்தேன். அப்போது என் மகள் கிழக்கே தலையும், மேற்கே காலுமாக கிடந்தார். அவரது வாயில் ரத்தம் வழிந்திருந்தது. என் பேரனை பார்த்தபோது அவனும் கட்டிலில் தூங்குவது போல் படுத்திருந்தார். அங்கு என் மகனும், என் தங்கையின் மகன் ரமேசும் அழுதுகொண்டு இருந்தார்கள். ஆஜர் எதிரி அங்கு இல்லை. எனக்கு எனது மகளின் இறப்பின் மீது சந்தேகம் இருந்ததால் நானும், என் சகல மகன் முத்துகிருஷ்ணனை அழைத்துக்கொண்டு வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். புகார் மனுவில் முத்துகிருஷ்ணன் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளார். அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆகும். காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டுவிட்டு இருவரின் உடல்களையும் தனியார் ஆம்புலன்சில் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மறுநாள் காலையில் நான், விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என் மகள் மற்றும் பேரனின் உடல்களை பிரேத பரிசோதனை செய்து என்னிடம் ஒப்படைத்தார்கள். அப்போது என் சம்மந்தியோ, ஆஜர் எதிரியோ அல்லது அவரது குடும்பத்தாரோ யாரும் வரவில்லை. அதன்பிறகு 2 வாரம் கழித்து ஆஜர் எதிரி கரிசல்குளம் கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் ஆஜராகி 08.06.2022ம் தேதி என் மகளையும், பேரனையும் அவர் தான் கொலை செய்ததாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்ததாக கேள்விபட்டேன். அதன்பின்னர் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிந்து அவர்கள் ஆஜர் எதிரியை கைது செய்ததாகவும் கேள்விபட்டேன். சம்பவத்திற்கு 1 வாரத்திற்கு முன்பு எனது மகளை ஆஜர் எதிர அடித்து வீட்டைவிட்டு விரட்டிவிட்டதாகவும், என் மகள் வேறு வழியின்றி பஸ் நிலையத்தை நோக்கி சென்றதாகவும், அதன்பிறகு என் மகளின் மாமியார் நிறைகுளத்தாள் என் பேரனை என் மருமகளிடம் ஒப்படைத்துவிட்டதாகவும்,

என் மகளை பக்கத்து வீட்டில் வசிக்கும் பாண்டியம்மாள் (எ) துர்க்கேஷ்வரி தனது வீட்டில் ஒருநாள் முழுவதும் வைத்திருந்ததாகவும், அதன் தொடர்ச்சியாக எதிரிக்கும், என் மகளுக்கும் பிரச்சினைகள் இருந்ததாக கேள்விபட்டேன். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

சாட்சி அஜித்குமார் என் மகன். என் மகளின் திருமணத்திற்கு முன்பே என் மனைவி இறந்துவிட்டார். என் மகளும், ஆஜர் எதிரியும் பி எஸ் ஆர் பொறியியல் கல்லூரியில் ஒன்றாக வேலை பார்த்தார்கள். இருவரும் காதலித்து இரு குடும்ப சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டார்கள். திருமணம் முடிந்த பிறகு வாரா வாரம் என் மகளும், எதிரியும் என் வீட்டிற்கு வருவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு வரும்போதெல்லாம் இருவரும் சந்தோஷமாகத்தான் இருந்தார்களா என்றால் சந்தோஷமாகத்தான் இருந்தார்கள். என் இளைய மகள் பெயர் வைதேகி. என் இளைய மகளுக்கு, எதிரியின் பெற்றோர் தான் மாப்பிளை பற்றிய தகவல் எனக்கு சொன்னார்கள். திருமணத்திற்கு முன்பு 2 வருடங்கள் என் மகள் பி எஸ் ஆர் பொறியியல் கல்லூரியில் வேலை பார்த்தார். என் மகள் கலைவாணி பள்ளியில் 4 மாதமாக வேலை பார்த்தார், அதன்பின்பு கர்ப்பமடைந்ததால் வேலைக்கு செல்வதை நிறுத்திவிட்டார். சம்பவம் நடப்பதற்கு முன்பு வரை என் மகளும், எதிரியும் வாரா வாரம் வீட்டிற்கு வருவார்கள் என்றால் சரிதான். என் மகள் வீட்டிற்கு வரும்போது என் மகள் என்னிடம் பிரச்சினை சம்மந்தமாக எதுவும் சொன்னதில்லை என்றால் சரிதான். உண்மையில் அவ்வாறு பிரச்சினை இல்லாததால் தான் என் மகள் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகன் எனக்கு போன் செய்யும் போது மாலை 06.00 மணி இருக்கும். அப்போது என் மகன் செவல்பட்டியில் இருந்தான். என் மகன், சகலப்பாடி வீட்டிற்கு பொங்கலுக்காக சென்றிருந்தான். நான் விஜயகரிசல்குளத்திற்கு சென்றபோது மணி இரவு 07.00 இருக்கும். எனக்கு அரை மணிநேரத்திற்கு முன்பாகவே என் மகன் விஜயகரிசல்குளம்

சென்றுவிட்டான். நான் போய் பார்க்கும் போது ஊர்மக்கள் அனைவரும் வீட்டைச்சுற்றி கூட்டமாக இருந்தார்கள். நான் போகும் போது போலீஸார் அங்கு இருந்தார்களா என்றால் நான் புகார் கொடுத்த பின்னர் தான் வந்தார்கள். நான் காவல்நிலையத்திற்கு செல்லும் போது இரவு 08.00 மணியிலிருந்து 08.30 மணிக்குள் இருக்கும். நானும், என் சகலப்பாடி மகன் முத்துகிருஷ்ணனும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். காவல்நிலையத்திற்கு சென்று சார்பு ஆய்வாளரிடம் தகவல் சொன்னோம். நான் சொல்லச்சொல்ல எழுதிக்கொண்டு அதன்பின்னர் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். புகார் கொடுத்த பின்பு நான் விஜயகரிசல்குளம் வரவில்லை. போலீஸார் விஜயகரிசல்குளத்திற்கு எத்தனை மணிக்கு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. என் மகள் இறந்துகிடந்ததாக சொல்லப்படும் வீடு மாடி வீடு. வீட்டின் கீழ் தளத்தில் எதிரியின் பெற்றோர்கள் குடியிருக்கிறார்கள். வீட்டில் என் மகளை பார்க்க போது நானும், முத்துகிருஷ்ணன் என்பவர் மட்டும் சென்றோம். நான் என் மகளை எழுப்பிப்பார்த்தேன், ஆனால் அவள் எழுந்திருக்கவில்லை. என் மகள் இயற்கை மரணம் அடைந்துவிட்டார் என்றும், என் பேரன், என் மகளிடம் பால் குடிக்கும் போது என்மகள் இயற்றை மரணம் அடைந்துவிடடதால் என் மகளிடம் என் பேரன் பால்குடிக்கும் போது மார்பகம் அமுக்கி மூச்சுத்திணறி இறந்துவிட்டான் என்றால் சரியல்ல. எதிரியின் தம்பி பசும்பொன் என் மகனுக்கு போன் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகளுக்கும், எதிரிக்கும் அடிக்கடி சண்டை வருவதாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, அடிக்கடி சண்டை வரும். சம்பவத்திற்கு 1 வாரத்திற்கு முன்பு எதிரி என் மகளை அடித்து வீட்டை விரட்டிவிட்டதாகவும், அப்போது என் மகள் ஒருநாள் முழுவதும் துர்க்கேஷ்வரி வீட்டில் இருந்ததாகவும் கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி, என் மகளுக்கு திருமணத்தின் போது நான் போட்ட நகைளை அடகு வைத்ததாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன்

என்றால் சரியல்ல. நான் கேள்விபட்டமாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் சொன்னநேரத்தில் கொடுக்கப்படவில்லை என்றும், வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் மகள், பேரன் இறப்பிற்கு எதிரி காரணமல்ல என்றால் சரியல்ல. நான் போகும்போது என் சம்மந்தியும், எதிரியும் விஜயகரிசல்குளத்தில் தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.2

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.அஜித்குமார் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 17th day of October, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி மாவட்டம் திருவேங்கடம் தாலுகா, கலிங்கப்பட்டி கிராமம், மேலத்தெருவில் வசித்து வருகிறேன். நான் B.E (Civil) படித்துள்ளேன். நான் இந்திய கப்பல்படைக்கு தேர்வானேன், அந்த நேரத்தில் நான் செல்லமுடியாததால் என் அப்பாவுடன் வசித்து வருகிறேன். என் அம்மா இறந்துவிட்டார். அ.சா.1 என் அப்பா. வழக்கில் இறந்துபோனவர்கள் என் அக்கா மற்றும் என் மருமகன் ஆவர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என் அக்காவின் கணவர். என் அக்காவும், எதிரியும் பி எஸ் ஆர் கல்லூரியில் பணிபுரிந்த போது இருவருக்கும் இடையே காதல் ஏற்பட்டு இருவர் குடும்பமும் பேசி முடிவு செய்து திருமணம் நடைபெற்றது. இருவரும் ஒரே இடத்தில் பணிபுரியும் போது இருவருக்கும் இடையே காதல் ஏற்பட்டதால் இரு குடும்பமும் பேசி அவர்களுக்கு விஜயகரிசல்குளத்தில் உள்ள முருகன் கோவிலில் வைத்து திருமணம் செய்து வைத்தோம். திருமணத்திற்கு பிறகு கொரோனா காவலத்தில் என் அக்காவை வேலையை விட்டு நிறுத்திவிட்டதால் அதன்பிறகு

திருவேங்கடத்தில் உள்ள கலைவாணி மெட்ரிக்குளேசன் பள்ளியில் ஆசிரியராக பணியில் சேர்ந்தார். என் அக்காவும் ஆஜர் எதிரியும் திருமணத்திற்கு பின்னர் முதலில் ஆஜர் எதிரியின் பெற்றோர்களுடன் கூட்டுக் குடுத்தனமாக வசித்து வந்தனர். அதன்பின்னர் ஆஜர் எதிரி வேலைக்கு போகாமல் வீட்டிலேயே இருந்து வந்ததால் அவர் தனிக்குடித்தனம் வைத்தால் திருந்திவிடுவார் என எண்ணி ஆஜர் எதிரியின் பெற்றோர்கள் என் மகளையும், ஆஜர் எதிரியையும் விஜயகரிசல்குளத்தில் ஆஜர் எதிரியன் பெற்றோர் வீட்டிற்கு அருகில் தனிக்குடித்தனம் வைத்தனர். என் அக்காவுக்கும், ஆஜர் எதிரிக்கும் என்ன பிரச்சினை ஏற்பட்டது என்றால் என் அக்காவிற்கு திருமணத்தின்போது எங்கள் வீட்டிலிருந்து அணிவிக்கப்படட நகைகளை அடமானம் வைத்து செலவு செய்தது சம்மந்தமாக அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டது. அந்த பிரச்சினை தனது கவனத்திற்கு வந்ததாக என் அப்பா சொல்லி எனக்கு தெரியும். என் அக்கா மாசமாக இருக்கும் போது மருத்துவமனை செல்லவேண்டும் என்றால் எங்களிடம் செலவுக்கு பணம் கேட்பார், அப்போது என் அக்கா போனில் இருந்து எதிரி பேசவிடமாட்டார். எதிரி அவருடைய போனிலிருந்து ஹலோ என்று சொல்லிவிட்டு என் அக்காவிடம் கொடுப்பார், என் அக்கா என்னிடமும், என் அப்பாவிடமும் அடிக்கடி பணம் கேட்டு வாங்கியுள்ளார். கடந்த 25.05.2022ம் தேதி நான் செவல்பட்டி அருகில் உள்ள கொட்டமடக்கிபட்டி கிராமத்தில் உள்ள என் மாமா வீட்டின் பொங்களுக்கு சென்றிருந்தேன். மாலை 06.00 மணிக்கு பசும்பொன் (எ) முத்துராமலிங்கம் என்னை போனில் தொடர்புகொண்டு எழுப்பினால் எழுந்திருக்கமாட்டங்க, சீக்கிரமா வா என்று கூறினார். நான் அருகே வேலைபார்த்துக்கொண்டிருந்த என் மாமா ரமேஷ் என்பவரை அழைத்துக்கொண்டு விஜயகரிசல்குளத்திற்கு சென்றேன். எனக்கு போனில் தகவல் கிடைத்தவுடன் அந்த தகவலை என் அப்பாவுக்கு போன் போட்டுசொன்னேன், நீ முன்னால் போ நான் பின்னால் வருகினேன் என்று என் அப்பா சொன்னார். நான் சென்று பார்த்தபோது என் அக்கா கட்டிலுக்கு கீழே

தரையில் கிடந்தார், வாயில் ரத்தம் வந்துகொண்டிருந்தது, என் மருமகன் கட்டிலுக்கு மேலே கிடந்தான். நான் என்ன நடந்தது என்று கேட்கலாம் என்று நினைத்தபோது, ஆஜர் எதிரியோ, அவரது குடும்பத்தினரோ வீட்டில் இல்லை. அதன்பிறகு எங்கள் குடும்பத்தினர் வந்துவிட்டனர். அப்போது என் மாமா ரமேஷ் அடிக்கடி இருவருக்கும் சண்டை வந்ததாக சொன்னார். மேலும் விசாரித்தபோது, என் அக்காவீட்டிற்கு அருகில் வசித்து வந்த பாண்டி என்பவரின் மனைவி சம்பவத்திற்கு 1 வாரத்திற்கு முன்பு என் அக்காவுக்கும், எதிரிக்கும் சண்டை வந்ததாகவும், ஆஜர் எதிரி என் அக்காவை வீட்டை விட்டு விரட்டிவிட்டதாகவும், என் அக்காவின் மாமியார் நிறைகுளத்தாள் குழந்தையை எடுத்து என் அக்காவிடம் கொடுத்ததாகவும், சுற்றியுள்ளவர்கள் அனைவரும் இருவரையும் சமாதானப்படுத்தி ஒருநாள் முழுவதும் என் அக்கா பாண்டி என்பவரின் மனைவி வீட்டில் குழந்தையுடன் இருந்ததாகவும் தெரிந்துகொண்டேன். இது சம்மந்தமாக என் அப்பா வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். சம்பவத்தன்று மதியம் சுமார் 11.00 மணிக்கு என் அக்காவிடம் போனில் பேசினேன். 03.00 மணிக்கு வருவதாக சொன்னேன், என்னுடைய போனிற்கு என் அக்கா போனிலிருந்து நீ வரவேண்டாம், டிரஸ் துவைக்க வேண்டியுள்ளது என்று மேசேஜ் வந்தது. அது என் அக்கா அனுப்பிய மேசேஜாக எனக்கு தெரியவில்லை. அதில் நிறைய எழுத்துப்பிழை இருந்தது. இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை –</u>

நான் என் அப்பாவுக்கு போன் செய்யும் போது மாலை 06.00 மணி இருக்கும். நான் விஜயகரிசல்குளத்திற்கு மாலை 06.30 மணிக்குள் சென்றேன். நான் போய் பார்க்கும் போது வீட்டிற்கு வெளியில் கூட்டமாக இருந்தது. நானும், என் மாமா ரமேசும் வீட்டின் மாடிக்கு சென்று என் அக்காவை பார்த்தோம். நாங்கள் இருவர் மட்டும் தான் சென்று பார்த்தோம், எங்களுடன் வேறு யாரும் வரவில்லை. என் அப்பா விஜயகரிசல்குளத்திற்கு வருவதற்கு முன்பாக

வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் தகவல் தெரிந்து போலீஸார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டனர். போலீஸார் மாடியில் சென்று என் அக்காவை பார்த்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து போலீஸார் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நான் என் அப்பாவுடன் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை, நான் மருத்துவனைக்கு சென்றேன். சம்பவத்திற்கு முன்பு என் அக்காவும், எதிரியும், மருமகனும் வாரா வாரம் எங்கள் வீட்டிற்கு வருவார்களா என்றால் என் அக்கா குழந்தை பெற்றபின்பு எங்கள் வீட்டில் தான் இருந்தார். என் அக்காவையும், மருமகனையும் எங்கள் வீட்டில் என் அம்மா இல்லாததால் பார்ப்பதற்கு ஆள் இல்லை என்று எதிரி வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டார்களா என்றால் இல்லை, 2, 3 மாதங்கள் எங்கள் வீட்டில் தான் இருந்தார். குழந்தை பிறந்து 1 மாதத்திலேயே பார்ப்பதற்கு ஆள் இல்லாததால் எதரியின் வீட்டிற்கு கூட்டிச் சென்றுவிட்டார்களா என்றால் இல்லை. சம்பவ தினத்தன்று மதியம் என் அக்கா எனக்கு போன் செய்யும் போது என் அக்காவிற்கும் எதிரிக்கும் பிரச்சினை இருந்ததாக எதுவும் என்னிடம் போனில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் அக்கா M.Sc., M.Phil. படித்துள்ளார். என்னுடைய போனிற்கு என் அக்கா போனிலிருந்து நீ வரவேண்டாம், டிரஸ் துவைக்க வேண்டியுள்ளது என்று மேசேஜ் வந்தது, அது என் அக்கா அனுப்பிய மேசேஜாக எனக்கு தெரியவில்லை என்றும், அதில் நிறைய எழுத்துப்பிழை இருந்தது என்று சொன்னவிவரம் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான், என் அக்கா அனுப்பியதாக தெரியவில்லை என்று போலீஸாரிடம் சொன்னேன். என் அக்காவுக்கு தனியாக செல்போன் உள்ளது. அந்த போனில் இருந்து தான் எனக்கு மேசேஜ் வந்தது. நான் போய் பார்க்கும் போது என் அக்கா கட்டிலில் தான் படித்திருந்தார் என்றால் சரியல்ல.

என் அக்கா இயற்கை மரணம் அடைந்துவிட்டார் என்றும், என் மருமகன், என் அக்காவிடம் பால் குடிக்கும் போது என் அக்கா இயற்றை மரணம்

அடைந்துவிடடதால் என் அக்காவிடம், என் மருமகன் பால்குடிக்கும் போது மார்பகம் அமுக்கி மூச்சுத்திணறி இறந்துவிட்டான் என்றால் சரியல்ல. எதிரியின் தம்பி பசும்பொன் எனக்கு போன் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அக்காவுக்கும், எதிரிக்கும் அடிக்கடி சண்டை வருவதாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, அடிக்கடி சண்டை வரும். சம்பவத்திற்கு 1 வாரத்திற்கு முன்பு எதிரி என் அக்காவை அடித்து வீட்டை விரட்டிவிட்டதாகவும், அப்போது என் அக்கா ஒருநாள் முழுவதும் பாண்டி என்பவரின் மனைவி வீட்டில் இருந்ததாகவும் கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி, என் அக்காவுக்கு திருமணத்தின் போது என் அப்பா போட்ட நகைளை அடகு வைத்ததாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேள்விபட்டமாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் அக்கா, என் மருமகன் இறப்பிற்கு எதிரி காரணமல்ல என்றால் சரியல்ல. நான் போகும்போது எதிரியின் பெற்றோரும், எதிரியும் விஜயகரிசல்குளத்தில் தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>